RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21s226

OPEN ACCESS

# இயேசுவின் மலைப்பொழிவு போதனையில் இறைநெறிக் கொள்கைகளும், கோட்பாடுகளும்

தா. ஆரோக்கியதாஸ் [அ, *]

[அ] தமிழ்த்துறை, மதுரைக் காமராஜர் பல்கலைக் கழகம், பல்கலை நகர், மதுரை, தமிழ்நாடு-625021, இந்தியா.

# Theories and Principles of Theology in the Sermon on the Mount Teaching of Jesus

T. Arokiyathas [a, *]

[a] Department of Tamil, Madurai Kamaraj University, Palkalai Nagar, Madurai-625021, Tamil Nadu, India.

* Corresponding Author: tadoss2010@gmail.com

Received: 04-01-2021
Revised: 22-04-2021
Accepted: 24-04-2021
Published: 30-04-2021

Check for updates

**ABSTRACT**

The Bible is a good teaching and ethics. The first book of the New Testament is the Gospel of Matthew. The most famous of the teachings of Jesus Christ is the Sermon on the Mount teaching. The purpose of this article is to highlight the theological principles found in the Sermon on the Mount and explain with evidence that the theological elements are found in the Gospel of Matthew for the development of society.

**Keywords:** Bible, Jesus Christ, Sermon on the Mount teaching, Matthew

## முன்னுரை

கிறிஸ்தவர்களின் இறைநெறிக் கொள்கைகளையும், கோட்பாடுகளையும், நெறிமுறைகளையும், சிறந்த போதனைகளையும் கற்பிக்கக் கூடியதாகத் திருவிவிலியம் காணப்படுகிறது. புதிய ஏற்பாட்டு நூலில் முதலாவது நூலாக மத்தேயு நற்செய்தி காணப்படுகின்றது. ‘இயேசு கிறிஸ்துவின் போதனைகளில் மிகவும் புகழ்வாய்ந்ததாகக் கருதப்படுவது மலைப்பொழிவு போதனை ஆகும்’ 1. இம்மலைப் பொழிவு போதனையில் காணப்படக்கூடிய இறைநெறிக் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் சுட்டிக் காட்டி, சமுதாய வளர்ச்சிக்குத் தேவையான இறையியல் கூறுகள் மத்தேயு நற்செய்தியில் காணப்படுவதைச் சான்றுகளுடன் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## மத்தேயு நற்செய்தி ஓர் அறிமுகம்

திருவிவிலியத்தில் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்ற இரு பெரும் பிரிவுகள் காணப்படுகின்றன. மத்தேயு நற்செய்தியில் மொத்தம் 28 பிரிவுகள் (அதிகாரங்கள்) காணப்படுகின்றன. இயேசு கிறிஸ்துவின் போதனைகள் ஐந்து உரைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் முதல் உரையாக மலைப்பொழிவு போதனை இடம் பெறுகிறது. இப்போதனைகள் 5 முதல் 7 முடிய உள்ள

பிரிவுகளில் சொல்லப்பட்ட 111 வசனங்களில் காணப்படும் கருத்துக்களிலுள்ள இறைநெறிக் கொள்கைகளும், கோட்பாடுகளும் மட்டுமே இக்கட்டுரைக்கு அடிப்படை மூலங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இயேசுவின் போதனைகள் சொற்பொழிவு இலக்கிய வடிவில் கொடுக்கப்பட்டுள்ளது. 'இயேசுவின் மலைப் பொழிவு' தனிச் சிறப்பு வாய்ந்த போதனையாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## இயேசுவின் மலைப் பொழிவு போதனையின் வரலாற்றுப் பின்னனி

யூதப் பாரம்பரியத்தில் 'மலையானது பரம்பரையாக இறைத் திருவுளத்தை மக்களுக்கு வெளிப்படுத்தும் இடமாக எண்ணப்பட்டது' 2. யூதமக்களின் பெருந்தலைவராகத் திகழ்ந்த 'மோசேயோடு ஆண்டவர் சீனாய் மலைமேல் பேசி முடித்தபின், கடவுளின் விரலால் எழுதப்பட்ட கற்பலகைகளான உடன்படிக்கைப் பலகைகள் இரண்டையும் அவரிடம் அளித்தார்.(விடுதலைப் பயணம்-31:18). அதே பாணியைப் பின்பற்றி இயேசு கிறிஸ்துவும் மலைமீது ஏறி, அங்கிருந்து ஒரு புதிய சட்டத்தை மக்களுக்கு வழங்கி, ஒரு புதிய இனத்தை உருவாக்குபவராக மத்தேயு நற்செய்தியாளர் மலைப் பொழிவு போதனையைத் தொகுத்துள்ளார். மலைப் பொழிவு போதனை ஏழு பகுதிகளைக் உள்ளடக்கியதாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

## மலைப் பொழிவு போதனைக் கோட்பாடுகளின் சிறப்பியல்புகள்

1. வியப்பில் ஆழ்த்தக் கூடிய போதனை. (மத்-7:28)
2. கண்டிப்பாகக் கடைபிடிக்கக் கூடியது.(மத்-23:23)
3. எச்சரிக்கை செய்வதாக இருக்கிறது. (மத்-16:12)
4. போதனை அதிகாரத்தோடு கற்பிப்பதாக இருக்கிறது. (மாற்கு-1:22)
5. திகைப்புறச் செய்யுமளவு அதிகாரம் கொண்ட புதிய போதனை. (மாற்கு-1: 27)
6. தற்பெருமை கொள்ளாத போதனை (யோவான்-7:16)
7. இயேசுவைப் பற்றிக் கொள்ளக் கூடிய போதனை. (லூக்கா-19:48)
8. அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. (யோவான்-7:17)
9. நம்பிக்கை ஏற்படுத்தக் கூடியது (திருத்தூதர் பணி-13:12)
10. புதிய வகையான போதனை. (திருத்தூதர் பணி-17:19)
11. ஒழுக்க நெறியை கடைபிடிக்க வைக்கிறது.(உரோமையர்-6:17)
12. கவனமாக இருக்கச் செய்கிறது. .(உரோமையர்-16:17)
13. உண்மையை எடுத்துரைப்பது. (1திமொத்தேயு-1:11)
14. நிலைத்திருக்கும் தன்மை வாய்ந்தது. (1திமொத்தேயு-4:16)
15. போதனைகளை நடத்தையில், செயலில் காட்டுதல் சிறப்பு. (தீத்து- 2:10)

## இயேசுகாவியத்தில் மலைப் பொழிவு

மலைப் பொழிவைப் பற்றி கவியரசர் கண்ணதாசன் தனது இயேசு காவியத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"இந்தஓர்மலையும் பின்னாள், இறுதிநாள் மலையும் பார்த்தால்,

அந்தக மனிதர்க் கெல்லாம், அறிவினை ஊட்டும் தோற்றம்!

விந்தைசேர் உலகில் இயேசு, வெடித்ததோர் புரட்சி ஓசை,

சிந்திய முத்தோ மக்கள், ஜீவனைக் காக்கும் பானம்” 3

‘மலைப்பிரசங்கம் என்று அழைக்கப்படும் இப்பகுதியின் மேன்மையை முற்றிலும் கூற இயலாது. இதைப் போன்றதொரு கருத்தாழம் நிறைந்த பகுதி எந்த மனிதனாலும் இன்றுவரை கூறப்படவில்லை’ 4. இவ்வசனங்கள் திருவருட்பேறு வசனங்கள் (பாக்கிய வசனங்கள்) என்று அழைக்கப்படுகிறது. இவை இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டிருக்கும் ஒவ்வொரு கிறிஸ்தவரும் வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய இறைநெறிக் கொள்கைகளாகும். மேற்காணும் 9 பேறு பெற்றவர்களைச் சுட்டிக் காட்டி, நல் வாழ்வு வாழும் வழிகளை யூதமக்களுக்கு மட்டுமல்ல, இன்றைய காலக் கட்டத்தில் வாழ்ந்து வரும் நமக்கும் இறைநெறிக் கொள்கைகளாகவும், கோட்பாடுகளாகவும் கொடுக்கப்பட்டுள்ளது.

## காந்தியடிகளும் மலைப்பொழிவின் மாற்றமும்

இயேசுவின் மலைப்பொழிவு போதனை தம் வாழ்வில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது என்று மகாத்மாகாந்தி கூறியுள்ளார் 5. இதே மலைப் பொழிவு போதனை கிறிஸ்தவர்கள் பின்பற்றக் கூடிய பத்துக் கட்டளைகளின் விளக்கமாகக் கருதுவதாக பிரபல ரஷ்ய எழுத்தாளர் லியோடால்ஸ்டாய் கூறியுள்ளார்.

## புதிய இறைநெறிக் கொள்கை நிறைவேறுதல்

இயேசுகிறிஸ்து பழைய சட்டங்களுக்கு மாற்றாக புதிய மனித நேயத்தை மையப்படுத்திய புதிய இறைநெறிக் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் நமக்குத் தருகிறார். ‘திருச்சட்டத்தையோ, இறைவாக்குகளையோ நான் அழிக்க வந்தேன் என நீங்கள் எண்ண வேண்டாம். அவற்றை அழிப்பதற்கல்ல, நிறைவேற்றவே வந்தேன்’ (மத்தேயு-5:17). பழைய சட்டங்களுக்கு மாற்றாக புதிய மனிதநேய கோட்பாடுகளை நமக்குக் கற்பிக்கிறார்.

## புதியகோட்பாடுகள்

பழங்காலத்தில் யூதச் சட்டங்கள் மிகவும் கடினமானதாக இருந்துள்ளன. ‘உயிருக்கு உயிர், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்’ (இணைச்சட்டம்- 19-21) ஆகிய பழி வாங்கக் கூடியச் சட்டங்கள் வழக்கத்தில் இருந்துள்ளன. இச்சட்டங்கள் மனிதனுக்கு முக்கியத்துவம் தராமல், சட்டத்தைக் கடைபிடித்தலுக்கு முக்கியத்துவம் தந்தன. இக்காலச் சூழலில் தான் இயேசு மனிதத்தை மையப்படுத்தி புதிய கோட்பாடுகளை வலியுறுத்துகிறார். பழைய ஏற்பாடு தருவது ஒரு வகையான சட்ட நெறி ஆகும். இந்தச் சட்டம், சட்டத்திற்காகவே நிறைவேற்றப்பட வேண்டும் என்ற ஒரு மனநிலையைக் கொண்டது. இயேசு இதனைக் கண்டிக்கிறார். சட்டத்திற்கு மனித நேயம் என்ற குறிக்கோள் தேவை என்பதை வலியுறுத்துகிறார். ‘சட்டம் மனிதருக்காக, மனிதர் சட்டத்திற்காக அல்ல6’ என்ற அடிப்படை விதிமுறையை இயேசு அளிக்கிறார். அன்பு, நீதி, இரக்கரம் போன்ற மனித நேயக் குணங்களைக் கொண்டிருந்தால்தான் சட்டம் அர்த்தமுள்ளதாக இருக்கும் என்ற புதிய பாணியில் சிந்திக்க இயேசு அழைக்கிறார். ‘கொலை செய்யாதே, கொலை செய்பவர் எவரும் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவர்’ (மத்தேயு-5:21). கொலை செய்வது மட்டும் குற்றமன்று, மனித உறவுகளை முறித்துப் பகைமையை உருவாக்கும் வன்சொற்கள்கூட குற்றங்களே. வாழ்க்கையில் நல்ல மனித உறவுகளை ஏற்படுத்திக் கொண்ட பிறகு தான் கடவுளுடன் நாம் சரியான உறவை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்ற புதிய இறைநெறிக் கோட்பாட்டை கற்றுத் தருகிறார்.

## பழிக்குப் பழி என்பதற்கு மாற்றுக் கோட்பாடு

'கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்' (மத்தேயு-5:38) என்ற பழிக்குப் பழி என்பதற்கு மாற்றுச் சிந்தனையாக 'தீமை செய்பவரை எதிர்க்க வேண்டாம் மாறாக உங்களை வலக் கன்னத்தில் அறைபவருக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டு' (மத்தேயு-5:39) என்றார். நமக்கு எதிராக வன்முறை செய்தோரிடம் பொறுமையுடன் பழக வேண்டும் என்பது இயேசுவின் புதிய, புரட்சிகரமான மாற்றுக் கோட்பாடு. இதனால் அமைதி நிலவும், வன்முறை குறையும் என்ற புதிய சித்தாந்தத்தை இவ்வுலகிற்குத் தந்த பெருமை இயேசு கிறிஸ்துவயே சாரும்.

## பகைவரிடமும் அன்பாயிருத்தல் என்ற அன்புக் கோட்பாடு

பழைய சட்டங்களில் 'பகைவரிடம் வெறுப்புக் கொள்வாயாக' எனக் கூறியிருப்பதைக் கேட்டிருக்கிறீர்கள்' (மத்தேயு-5:43) ஆனால் இயேசு நான் உங்களுக்குச் சொல்கிறேன் 'உங்கள் பகைவரிடமும் அன்பு கூறுங்கள். உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்' (மத்தேயு-5:44). உலக இறைநெறிக் கோட்பாட்டில் புதிய வரவாக பகைவரிடமும் அன்பு செலுத்துங்கள் என்ற உயர்ந்த சிந்தனையை வெறும் வார்த்தைகளாகச் சொல்லாமல் தனது வாழ்வில் சிலுவையில் இறக்கும் தருவாயில் தன்னைத் துன்புறுத்திய படைவீரர்களுக்காக 'தந்தையே இவர்களை மன்னியும், (லூக்கா -23:34) என்று இறை வேண்டல் செய்து தனது இறைநெறிக் கோட்பாட்டிற்கு வலுச்சேர்த்தார்.

## அறச் செயல்களுக்கு முன்மாதிரியான இயேசுவின் புதிய கோட்பாடு

யூதர்கள் மூவகையான அறச்செயல்களைக் கடைபிடித்தனர். அவை 1.தர்மம் செய்தல், 2. இறை வேண்டல், 3. நோன்பு இருத்தல.; காலப் போக்கில் அறச்செயல்கள் வெறுமனே மக்களின் நன்மதிப்பைப் பெறுவதற்காகச் செய்யப்பட்டு, உள்ளாந்த தன்மையை இழந்துவிட்டன. இதனால் இயேசு யூதர்களின் வெளிவேடத்தைக் கண்டித்து அகற்றவும், அறச்செயல்கள் செய்வதன் உண்மையான அர்த்தத்தை வலியுறுத்த முயற்சி செய்கிறார். ஆடம்பரமின்றி, வெளிவேடமின்றிச் செய்யப்படும் அறச்செயல்களுக்குத் தான் பலன் உண்டு; என்று தனது போதனைகளில் தெளிவாகக் கூறியுள்ளார். மேலும் முகமலர்ச்சியுடன் மேற்கொள்ளும் நோன்பைத்தான் இறைவன் ஏற்பார் என்ற கருத்தையும் வலியுறுத்துகிறார். நோன்பு இருத்தல் என்பது ஒரு பாவப் பரிகார முயற்சி. அது வெளிவேடம் என்ற பகட்டிற்கு இரையாகி விடக்கூடாது என்பதில் இயேசு உறுதியாக இருக்கிறார்7 என்ற உன்னதமான இறைநெறிக் கோட்பாடு வலியுறுத்தப்பட்டுள்ளது.( மத்தேயு - 6: 1-4 )

## கவலை வேண்டாமே

கடவுள் மீதும் அவரது பராமரிப்பின் மீதும் முழுமையான நம்பிக்கை கொள்ள வேண்டும். நமது அன்றாடத் தேவைகளைப் பற்றிய கவலை தவறானது என்று இயேசு தமது போதனைகளில் குறிப்பிட்டுள்ளார். இக்கருத்தை வலியுறுத்த வானத்துப் பறவைகளையும், காட்டு மலர்ச் செடிகளையும் எடுத்துக்காட்டாகப் பயன்படுத்தியுள்ளார். 'உயிர் வாழ எதை உண்பது, எதைக் குடிப்பது என்றோ, உடலுக்கு எதை உடுத்துவது என்றோ நீங்கள் கவலை கொள்ளாதீர்கள். வானத்துப் பறவைகளை நோக்குங்கள்; அவை விதைப்பதுமில்லை; அறுப்பதுமில்லை; களஞ்சியத்தில் சேர்த்து வைப்பதுமில்லை. உங்கள் விண்ணகத் தந்தை அவற்றுக்கும் உணவு அளிக்கிறார்' . (மத் -6: 25,26) உலகப் பொருட்களின் பிடியிலிருந்து விடுதலை பெற வேண்டுமெனில் உணவு, உடை, வீடு போன்ற அடிப்படைத் தேவைகள் பற்றிய கவலையினின்றும் நமக்கு விடுதலை தேவை. இதனைப் பெறுவதற்கு அடிப்படையாக அமைவது ஆழ்ந்த இறைப்பற்றாகும் என்பதை இயேசு கிறிஸ்து நமக்கு உணர்த்துகிறார்.

## வாழ்க்கையை உயர்த்தும் பொன்விதி

மனித உறவுகளில் நமக்குத் தேவையானவற்றை உறவினர்களிடமும் நண்பர்களிடமும் நாம் கேட்கும்போது அவர்கள் தரவேண்டும் என்று நினைக்கிறோம். உதவிகள் மட்டுமல்ல, மரியாதையையும் தான் பிறரிடம் எதிர்பார்க்கிறோம். ஆனால் நாம் பிறரை மதிக்கிறோமா என்பது கேள்விக்குறியாகத்தான் இருக்கிறது. இதைத் தான் இயேசு கிறிஸ்து 'பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இறைவாக்குகளும் திருச்சட்டமும் கூறுவது இதுவே.' (மத் 7: 12). பிறரின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் போது பல்வகையான பிரச்சனைகள், குழப்பங்கள் குறைகின்றது என்ற இறைநெறிக் கோட்பாடு, இறைநெறிக் கொள்கை விளக்கப்படுகிறது.

## முடிவுரை

நமது வாழ்வு அர்த்தமுள்ள வாழ்வாகவும், பிறருக்கு உதவுகின்ற வாழ்வாகவும் இருப்பதற்கான அடிப்படையாக அமைவது இயேசுவின் புதிய போதனைகள் நிறைந்த இறைநெறிக் கோட்பாடுகளின்படியும், ஆண்டவரின் திருவுளத்தின்படி நடக்க வேண்டும் என்பதாகும். பகைவனுக்கு மன்னிப்பு, அயலானிடம் அன்பு, அறச்செயல்களில் ஈடுபாடு, சினம் கொள்ளாதிருத்தல், பழிவாங்காதிருத்தல், கவலை கொள்ளாமல் இறைவன் மீது நம்பிக்கை கொள்ளல், யாரையும் தீர்ப்பிடாமல் இருத்தல் ஆகிய இறைநெறிக் கொள்கைகளையும், கோட்பாடுகளையும்; கடைபிடித்தால் வாழ்வு வளமாகும். இவையே இயேசுவின் மலைப்பொழிவின் போதனைகளில் அடங்கியிருக்கும் புதிய இறைநெறிக் கொள்கைகளும், கோட்பாடுகளும் ஆகும்.

## References

Kaviyarasu Kannadasan, (1982) Jesus Epic, Kalaikkaviri publishing, Tiruchirappalli, India.

The Books of the Bible, Wikipedia

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL
**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License